**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

**முன்னிலை:** M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS),
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
குடவாசல்.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 -ஆம் நாள் புதன்கிழமை

**STC. No. 228 of 2025**

**CNR No. TNTV15-001258 -2025**

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
குடவாசல் காவல் நிலையம்,
குற்ற எண். 387/2024. --- குற்றமுறையிடுபவர்

- எதிர் -

திரு. அலெக்ஸாண்டர், வயது 20/2026,
த/பெ. போனிபாஸ்,
மாதா கோவில் தெரு, மணப்பறவை
--- எதிரி

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Summary Case Trial(S.T.C) No.228 of 2025 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by Inspector of Police, Kodavasal PS. in Cr.No.387/2024 |
| 3. | Name of the accused | B.Alexandar |
| 4. | Father's Name | S/o. Bonibass |
| 5. | Occupation | - |
| 6. | Residence | Madha Kovil Street, Manaparavai |
| 7. | Age | 20/2026 |



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.22 10:39:11 +0530

<table>
<tr><td>8.</td><td>Date of occurrence</td><td>19.10.2024</td></tr>
<tr><td>9.</td><td>Date of complaint<br>Date of filing Charge sheet</td><td>19.10.2024<br>19.10.2024</td></tr>
<tr><td>10.</td><td>Date of apprehension</td><td>-</td></tr>
<tr><td>11.</td><td>Date of release on bail</td><td>-</td></tr>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td>Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s 207 Cr.P.C.</td><td>27.02.2026</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td>On 27.02.2026 the accused questioned on substance of accusation U/s.8(c) r/w 20 (b) (ii) (A) NDPS Act. Accused denied as false case and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td>15</td><td>Date of commencements of trial -The date of examination – in chief and cross-examination of a witness</td><td><table><tr><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr><tr><td>PW1</td><td>16.04.2026</td><td>16.04.2026</td></tr><tr><td>PW2</td><td>16.04.2026</td><td>16.04.2026</td></tr></table></td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused under section 313 of the code – Closed of trial</td><td>20.04.2026</td></tr>
<tr><td>17.</td><td>Sentence on order</td><td>முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 8(c) r/w 20 (b) (ii) (A) NDPS Act-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளில் இருந்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 255(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.</td></tr>
<tr><td>18.</td><td>Service of copy of Judgment or finding on accused</td><td>No. The Judgment was uploaded on CIS portal and made available</td></tr>
</table>



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.22 10:39:18 +0530

| | | |
|---|---|---|
| | | in E- Courts |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | இவ்வழக்கில் கைப்பற்றபட்ட தடய பொருளான வழக்கு சொத்து எண்.43/2024 அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுதை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழித்துவிட இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கானது இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வந்தும், குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் ஆஜராகியும், சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலினையிலிருந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

**<u>அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்</u>** :-

1. குடவாசல் காவல் சரகம் மணப்பறவை பஸ்டாப் அருகே கடந்த 19.10.2024 ந் தேதி காலை 10.45 மணிக்கு இவ்வழக்கின் எதிரியாகிய நீர் எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இல்லாமல் 100 கிராம் எடை அளவு கஞ்சாவை இடுப்பில் பாலிதீன் பேப்பரில் சுற்றி மறைத்து வைத்திருந்து தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக இவ்வழக்கின் விசாரணை அதிகாரியால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்நீதிமன்றத்தால் மேற்படி குற்ற இறுதி அறிக்கையும், மற்ற ஆவணங்களையும் பரிசீலனை செய்து வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.22 10:39:22 +0530

அனுப்பப்பட்டது.

3. எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கை அதனுடன் இணைந்த ஆவணங்களை பரிசீலினை செய்தபோது, எதிரி மீதான குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய முகாந்திரம் இருந்த காரணத்தினால் எதிரி மீது சட்டப்பிரிவு 8(c) r/w 20 (b) (ii) (A) NDPS Act -ன் கீழ் குற்றச்சாட்டு பற்றி விளக்கி கூறி வினவியபோது எதிரி தன் மீதான குற்றத்தை மறுத்து தான் குற்றவாளி இல்லை என கூறினார். அதன் பின்னர் அரசுத்தரப்பில் சாட்சியமளிக்க உத்தரவிடப்பட்டது.

5. இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.2 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்களும், அ.சா.பொ.1-ன் வரிசையாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

6. <u>இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெரும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு</u> :-

(i) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.1 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 19.10.2024 ம் தேதிஅன்று காலை 10.00 மணியளவில் நான் நிலைய பொறுப்பிலிருந்த போது உதவி ஆய்வாளர் திரு. கணேசன் என்பவர்க்கு கிடைத்த ரகசிய தகவலின் படி மணப்பறவை பஸ் ஸ்டாப் அருகே அலெக்ஸாண்டர் என்பவர் கஞ்சா விற்பணை செய்வதாக கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று மேற்படி உதவி ஆய்வாளர் பொது நாட்குறிப்பில் பதிவு செய்தும் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து கொண்டு மேற்படி உதவி ஆய்வாளருடன்



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.22 10:39:27 +0530

நானும் முதல் நிலைக் காவலர் சிவானந்தம் ஆகியோர்கள் மணப்பறவை பஸ்ஸ்டாப் அருகே கண்காணித்த போது அங்கு நின்று கொண்டிருந்த நபரை மேற்படி உதவி ஆய்வாளர் விசாரித்தபோது அவர் தனது பெயர் அலெக்ஸாண்டர் த/பெ. போனிபாஸ் என்று கூறினார். பி ன்னர் அந்த நபரிடம் மேற்படி உதவி ஆய்வாளர் தாங்கள் கஞ்சா விற்பனை செய்து வருவதாக தகவல் கிடைத்திருப்பதாகவும் சோதனை செய்வதற்கு அருகில் உள்ள நீதிபதியிடமோ அல்லது அரசு பதிவு பெற்ற அலுவலரிடமோ அழைத்துசென்று சோதனை செய்ய வேண்டுமென எழுத்து மூலமாக அறிவிப்பு கொடுத்ததற்கு அந்த நபர் என் னை போலீசாராகிய நீங்களே சோதனைசெய்துகொள்ளலாம் என்று எழுத்து மூலமாக சம்மதம் தெரிவித்தார் என்றும், தங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் அலெக்ஸாண்டரை சோதனை செய்த போது அவரது இடுப்பில் பாலிதீன் பேப்பரில் சுற்றி மறைத்து வைத்திருந்த பொட்டலத்தை பார்த்தபோது அதில் கஞ்சா இருந்தது என்றும், அதைப்பற்றி உதவி ஆய்வாளர் விசாரித்தபோது அவரிடம் அரசு அனுமதியோநான் சொன்ன நாள் சொன்ன நேரம் சொன்ன இடத்தில் உதவி ஆய்வாளர் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரியை கைது செய்ததாக சொல்லப்படும் இடம் மக்கள் நடமாட்டம்அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான். நான் சொல்வது போல் உதவி ஆய்வாளர் தடயப்பொருட்களை கைப்பற்றவில்லை என்றாலும் புள்ளிவிவரத்திற்காக எதிரிமீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் எதிரியை சொன்ன நாள் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும் எதிரிக்கம் இவ்வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல. உரிமமோ இல்லை என்று கூறினார் என்றும், பின்னர் உதவி ஆய்வாளர் 10.45 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்து அவரது உறவினருக்கு தகவல் தெரிவித்தார். நாங்கள் எடுத்து சென்ற கை தராசில் எடைப்போட்ட போது மொத்தம் 100 கிராம் அளவு கஞ்சா இருந்தது. உதவி ஆய்வாளர் தலா 10 கிராம் எடை உள்ள கஞ்சாவை இரண்டு



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.22 10:39:32 +0530

பொட்டலாங்களாக ஆய்வுக்கு எடுத்து சீல் வைத்து மீதமுள்ள 80 கிராம் கஞ்சாவை சீல் வைத்து 11 மணியளவில் என் முன்னிலையிலும் சிவானந்தம் முன்னிலையிலும் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். தனிநபர் சாட்சிகள் யாரும் அங்கு முன் வரவில்லை. கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், **(கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** என்றும், பின்னர் எதிரி மற்றும் தடயப்பொருட்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண் 387/2024 சட்டப்பிரிவுகள் 8(c), 20(b)(ii)(A) NDPS Act ன் கீழ் உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார். என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(ii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.2 அவரது சாட்சியத்தில், தான் தற்போது நன்னிலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 19.10.2024 ம் தேதிஅன்று காலை 10.00 மணியளவில் நான் குடவாசல் காவல் நிலையத்தில் பொறுப்பிலிருந்த போது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி மணப்பறவை பஸ் ஸ்டாப் அருகே அலெக்ஸாண்டர் என்பவர் கஞ்சா விற்பணை செய்வதாக கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று தான் பொது நாட்குறிப்பில் பதிவு செய்தும் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து கொண்டேன் என்றும், **(துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட கடிதம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்டுகிறது.)** என்றும், என்னுடன் முதல் நிலைக் காவலர்கள் திரு. சசிகுமார் மற்றும் சிவானந்தம் ஆகியோர்கள் மணப்பறவை பஸ்ஸ்டாப் அருகே கண்காணித்த போது அங்கு நின்று கொண்டிருந்த நபரை நான் விசாரித்தபோது அவர் தனது பெயர் அலெக்ஸாண்டர் த/பெ. போனிபாஸ் என்று கூறினார். பி ன்னர் அந்த நபரிடம் தாங்கள் கஞ்சா விற்பணை செய்து வருவதாக தகவல் கிடைத்திருப்பதாகவும் சோதனை செய்வதற்கு அருகில் உள்ள



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.22 10:39:37 +0530

நீதிபதியிடமோ அல்லது அரசு பதிவு பெற்ற அலுவலரிடமோ அழைத்துசென்று சோதனை செய்ய வேண்டுமென எழுத்து மூலமாக அறிவிப்பு கொடுத்ததற்கு அந்த நபர் என் னை போலீசாராகிய நீங்களே சோதனைசெய்துகொள்ளலாம் என்று எழுத்து மூலமாக சம்மதம் தெரிவித்தார். **(சோதனை அனுமதி கடிதம் அ.சா.ஆ.3 ஆகவும் சோதனை சம்மத கடிதம் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.)** என்றும், தான் அலெக்ஸாண்டரை சோதனை செய்த போது அவரது இடுப்பில் பாலிதீன் பேப்பரில் சுற்றி மறைத்து வைத்திருந்த பொட்டலத்தை பார்த்தபோது அதில் கஞ்சா இருந்தது. அதைப்பற்றி தான் விசாரித்தபோது அவரிடம் அரசு அனுமதியோ உரிமமோ இல்லை என்று கூறினார். பின்னர் நான் குற்ற காரணம் கூறி 10.45 மணியளவில் கைது செய்து அவரது உறவினருக்கு தகவல் தெரிவித்தேன் என்றும், தாங்கள் எடுத்து சென்ற கை தராசில் எடைப்போட்ட போது மொத்தம் 100 கிராம் அளவு கஞ்சா இருந்தது என்றும், அதிலிருந்து தலா 10 கிராம் எடை உள்ள கஞ்சாவை இரண்டு பொட்டலாங்களாக ஆய்வுக்கு எடுத்து சீல் வைத்து மீதமுள்ள 80 கிராம் கஞ்சாவை சீல் வைத்து 11.00 மணியளவில் என்னுடன் வந்த முதல் நிலைக்காவலர்கள் திரு. சசிகுமார் மற்றும் சிவானந்தம் ஆகியோர்களின் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். தனிநபர் சாட்சிகள் யாரும் அங்கு முன் வரவில்லை. கைப்பற்றுதல் மகசர் என்னால் தயார் செய்யப்பட்து தான் என்றும், **(கைப்பற்றுதல் மகசர் ஏற்கெனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.)** என்றும், பின்னர் எதிரி மற்றும் தடயப்பொருட்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண் 387/2024 சட்டப்பிரிவுகள் 8(c), 20(b) (ii)(A) NDPS Act ன் கீழ் நான் வழக்கு பதிவு செய்தேன் **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் எதிரியை நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தினேன். மேலும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட தடயபொருட்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து அது நீதிமன்ற வழக்கு சொத்து எண் 43/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது.



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.22 10:39:41 +0530

**(படிவம் 91 அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட தடயபொருட்களை தடய அறிவியல் ஆய்வறிக்கைக்காக நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து மாதிரிக்கு எடுக்கப்பட்டிருந்த இரண்டு பொட்டலங்களை நீதிமன்றம் மூலம் தடய அறிவியல் ஆய்யவறிக்கைக்கு உட்படுத்தினேன் என்றும், தஞ்சாவூரில் உள்ள வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட தடய அறிவியல் ஆய்வறிக்கை பெறப்பட்டது. **(தடய அறிவியல் ஆய்வறிக்கை Exhibit C1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி ஆய்வறிக்கையில் கஞ்சா என குறிப்பிடப்பட்டுள்ளது. மாதிரிக்கு எடுத்தது போக மீதமுள்ள மாதிரி கஞ்சாவை ஆய்வகத்திலிருந்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்கள். **(மாதிரி கஞ்சா சா.பொ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மாதிரிக்கு எடுத்தது போக மீதமுள்ள 80 கிராம கஞ்சாவை மல்கானாவில் வைப்பதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. பின்னர் பட்டியல் சாட்சிகள் 1முதல் 2 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், இத்துடன் தனது புலன் விசாரணை முடித்து எதிரிகளின் செய்கையானது சட்டபிரிவுகள் 8(c), 20(b)(ii)(A) NDPS Act ன் கீழ் தண்டிக்கக்க குற்றம் என கடந்த 27.12.2024 ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு எதிரான சாட்சியம் பற்றி எதிரியிடம் பிரிவு 313(1)(ஆ)-ன் கீழ் வினவ எதிரி " பொய் சாட்சி " என்று மறுத்து விட்டார். தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் "இல்லை" என்று கூறினார்.

8. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

9. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.22 10:39:46 +0530

என்பதேயாகும்.

10. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், அரசு தரப்பு வழக்கானது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், அதனால் அதிகபட்ச தண்டனை அளிக்க வேண்டும் என்று வாதிட்டார்.

11. இவ்வழக்கின் எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அரசு தரப்பு சாட்சிகளில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி அதனால் ஏற்பட்டுள்ள சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**அரசு தரப்பு சாட்சியங்களை மதிப்பிடுதல்** :-

12. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான ஆவணங்களும், இவ்வழக்கில் படிவம் 91 ல் குறிப்பிடப்பட்டுள்ள தடைய பொருட்கள் அ.சா.பொ.1 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

13. இவ்வழக்கில் எதிரியானவர் 100 கிராம் கஞ்சாவை எவ்விதமான அரசு அனுமதியின்றி சட்டவிரோதமாக வைத்திருந்து விற்பனை செய்ததே முக்கிய குற்றச்சாட்டாகும். ஆனால், இவ்வழக்கில் ஒப்புதல் வாக்கமூல சாட்சியங்கள் யாரையும் விசாரிக்கவில்லை. எனவே, உண்மையில் கஞ்சாவானது எதிரியிடமிருந்து தான் கைப்பற்றப்பட்டது என்று அரசுத் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், எதிரியானவர் அந்த கஞ்சாவை விற்கும் நோக்கத்துடன் வைத்திருந்ததாக குற்றம்சாட்டப்பட்டுள்ள நிலையில் அவர் அதை விற்பனைக்காகத்தான் வைத்திருந்தார்



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.22 10:39:50 +0530

என்றோ மற்ற நபர்களிடம் விற்க முயற்சி செய்தோர் என்றோ அவ்வாறு அவர் விற்று அதை மற்ற நபர்கள் வாங்கினார்கள் என்றோ அரசுத் தரப்பில் எவ்வித சாட்சியமும் முன்னிலைப்படுத்தப்பட்டு நிரூபிக்கப்படவில்லை.

14. மேலும், எதிரியானவர் சம்பவ தினத்தன்று காலை நேரத்தில் 10.45 மணிக்கு கைது செய்யப்பட்டதாக கூறப்படும் நிலையிலும், சம்பவ இடமானது பொதுமக்கள் அதிகம் புழக்கம் உள்ள இடம் என்ற போதிலும், தனிநபர்களை வழக்கு சம்பவத்தை நிரூபிக்கும் வகையில் சாட்சிகளாக முன்னிலைப்படுத்தாதது அரசுத் தரப்பு வழக்கின் மீது சந்தேகத்தை ஏற்படுத்தும் விதமாக அமைந்துள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. மேலும், இவ்வழக்கில் புகாரானது இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான உதவி காவல் ஆய்வாளர் திரு. கணேசன் என்பவரால் அளிக்கப்பட்டு அதனடிப்படையில் அவர் மூலமாகவே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு, புகார் அளித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த மேற்படி ஆய்வாளரை இவ்வழக்கினை புலன் விசாரணையும் செய்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்துள்ளது இயற்கை நீதியின் கோட்பாடுக்கு எதிராகவும், மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்புகளுக்கு எதிராகவும் அமைந்துள்ளது.

16. எனவே, மேற்படி குறைபாடுகளினால் ஏற்பட்டுள்ள சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்வது உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. எனவே, இவ்வழக்கில் எதிரி மீது சட்டப்பிரிவு 8(c) r/w 20 (b) (ii) (A) NDPS Act -ன் கீழ்சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படாததால்,



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.22 10:39:55 +0530

சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**உத்தரவு**

17. முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி மீது சட்டப்பிரிவு 8(c) r/w 20 (b) (ii)(A) NDPS Act -ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டிலிருந்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

18. எதிரி எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் கைப்பற்றபட்ட தடய பொருளான வழக்கு சொத்து எண்.43/2024 அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுதை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழித்துவிட இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணினியில் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டடது.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.22 10:40:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. சசிகுமார் |
| அ.சா.2 | திரு. கணேசன்-காவல் ஆய்வாளர் |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 19.10.2024 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.2 | 19.10.2024 | தகவல் தெரிவிக்கப்பட்ட கடிதம் |
| அ.சா.ஆ.3 | 19.10.2024 | சோதனை அனுமதி கடிதம் |
| அ.சா.ஆ.4 | 19.10.2024 | சோதனை சம்மத கடிதம் |
| அ.சா.ஆ.5 | 19.10.2024 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | 19.10.2024 | படிவம் எண்.91 |

**அரசு தரப்பு சான்று பொருள்:-**

அ.சா.பொ.1 - தலா 10 கிராம் எடையுள்ள S1,S2 என குறியீடு செய்யப்பட்ட SHO சீல் வைக்கப்பட்ட கஞ்சா பொட்டலங்கள் இரண்டு, 80 கிராம் எடையுள்ள P1 என குறியீடு செய்யப்பட்ட SHO சீல் வைக்கப்பட்ட கஞ்சா பொட்டலங்கள் ஒன்று.

**நீதிமன்ற தரப்பு சான்று பொருள்:-**

தடய அறிவியல் ஆய்வறிக்கை

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-**

-இல்லை-

**வழக்கு சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | 19.10.2024 முதல் 28.10.2024 |
| 2. | குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 24.09.2025 |
| 3. | குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | 27.02.2026 |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | -- |



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.22 10:40:19 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | சாட்சிகள் விசாரணை | **Witness** | **Date of Chief** | **Date of Cross** |
| | | PW-1 : | 16.04.2026 | 16.04.2026 |
| | | PW-2 : | 16.04.2026 | 16.04.2026 |
| 6. | கு.வி.மு.ச. பிரிவு 313-ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 20.04.2026 | | |
| 7. | எதிரி தலைமறைவு காலம் பற்றிய விபரம் | இல்லை. | | |
| 8. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விபரங்கள் | இல்லை. | | |

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.22 10:40:09 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.